## ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

அறிவிப்பு எண்.அ1/3823/2025 நாள் : 26.12.2025

விழுப்புரம் மாவட்டம், திருவெண்ணெய்நல்லூர் ஊராட்சி ஒன்றியத்தில் ஒன்றிய தலைப்பின் கீழ் காலியாக உள்ள ஈப்பு ஓட்டுநர் பணியிடத்திற்கு **SC(A)/W-DW** என்ற இனசுழற்சி முறையில் நிரப்புவதற்கான அறிவிக்கை வெளியிடப்பட்டு இணையதளம் வாயிலாக விண்ணப்பங்கள் வரவேற்கப்பட்டது. இந்நிலையில் **SC(A)/W-DW** என்ற இன சுழற்சியின் கீழ் தகுதியான விண்ணப்பங்கள் ஏதும் பெறப்படாததால் திருவெண்ணெய்நல்லூர் ஊராட்சி ஒன்றியத்தில், ஒன்றிய தலைப்பின் கீழ் காலியாக உள்ள ஈப்பு ஓட்டுநர் பணியிடத்தினை பூர்த்தி செய்யும் / நிரப்பும் பொருட்டு **SC(A)-W** எனும் இனசுழற்சியில் தகுதியான நபர்களிடமிருந்து 06.11.2025 முதல் 20.11.2025 வரை நேரடியாக / அஞ்சல் வழியாக பெறப்பட்ட விண்ணப்பங்களுக்கு 15.12.2025 அன்று சான்றிதழ் சரிபார்ப்பு மற்றும் தகுதிதேர்வில் கலந்துகொள்ள தெரிவித்து கடிதம் அனுப்பிவைக்கப்பட்டதில், அன்றைய தினம் எவரும் கலந்துகொள்ளவில்லை.

எனவே, தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016 பிரிவு 26 மற்றும் 27—ன்படி ஒன்றிய தலைப்பின் கீழ் காலியாக உள்ள ஈப்பு ஓட்டுநர் பணியிடத்தினை பூர்த்தி செய்யும் / நிரப்பும் பொருட்டு **SC(A)-G - <u>பட்டியல் சாதியின அருந்ததியர்—(பொது)</u>** எனும் இனசுழற்சியில் தகுதியான நபர்களிடமிருந்து 30.12.2025 முதல் 14.01.2026 வரை நேரடியாக / அஞ்சல் வழியாக விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

| | பொருள் | ஈப்பு ஓட்டுநர் |
|---|---|---|
| 1. | ஊதியம் | ரூ.19500—71900 (Level-8) |
| 2. | வயது (01.07.2025 அன்று) | 18—42 |
| 3. | 01.07.2025 அன்று அதிகபட்ச வயது வரம்பு | 42 |
| 4. | மொத்த பணியிடங்கள் | 1 |
| 5. | இன சுழற்சி விவரங்கள் | SC(A) -G - பட்டியல் சாதியின அருந்ததியர் (பொது) |
| 6. | கல்வி தகுதி மற்றும் பிற தகுதிகள் | ➢ 8 ஆம் வகுப்பு தேர்ச்சி<br>➢ செல்லதக்க ஓட்டுநர் உரிமம்<br>➢ 5 ஆண்டுகள் முன் அனுபவம் |
| 7. | விண்ணப்ப படிவம் | விண்ணப்ப படிவம் https://viluppuram.nic.in என்ற இணையதள முகவரியில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். |
| 8. | விண்ணப்ப கட்டணம் | **The Block Development Officer, Panchayat Union, Thiruvennainallur** என்ற பெயரில் ரூ.50/—க்கான வங்கி வரைவினை (DD) விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும். |

| | | |
|---|---|---|
| 9. | விண்ணப்பங்கள் பெறப்படும் காலம் | 30.12.2025 முதல் 14.01.2026 வரை |
| 10. | விண்ணப்பத்தினை அனுப்ப வேண்டிய முகவரி | ஆணையர், ஊராட்சி ஒன்றியம், திருவெண்ணெய்நல்லூர். |

## நிபந்தனைகள்

- தகுதியுள்ள விண்ணப்பதாரர்கள் https://viluppuram.nic.in என்ற இணையதள முகவரியில் இருந்து விண்ணப்ப படிவத்தினை பதிவிறக்கம் செய்து, அனைத்து கலங்களையும் முழுமையாக பூர்த்தி செய்து, கல்வித்தகுதி, சாதிச்சான்று, ஓட்டுநர் உரிமம், முன் அனுபவச் சான்று உள்ளிட்ட அனைத்து சான்றிதழ்களின் சுய சான்றொப்பமிட்ட நகல்களை இணைத்து நிர்ணயிக்கப்பட்ட தேதிக்குள் விண்ணப்பித்திட வேண்டும்.

- நிர்ணயிக்கப்பட்டுள்ள இனசுழற்சி, வயது. முன் அனுபவம் மற்றும் கல்விதகுதியுள்ள நபர்களின் விண்ணப்பங்கள் மட்டுமே பரிசீலிக்கப்படும்.

- தகுதியில்லா விண்ணப்பங்கள் மற்றும் காலக்கெடு முடிவுற்று பெறப்படும் விண்ணப்பங்கள் அனைத்தும் முன்னறிவிப்பின்றி நிராகரிக்கப்படும்.

- மேலே குறிப்பிடப்பட்டுள்ள இனசுழற்சி மற்றும் இட ஒதுக்கீட்டின்படியே பணிநியமனம் மேற்கொள்ளப்படும்.

தகுதியுள்ள விண்ணப்பதாரர்களுக்கு சான்றிதழ் சரிபார்ப்பு மற்றும் தகுதி திறன் தேர்வு குறித்த தகவல் அஞ்சல் மூலமாக அனுப்பிவைக்கப்படும்.

ஆணையர்,
ஊராட்சி ஒன்றியம்,
திருவெண்ணெய்நல்லூர்.

26/12/25